பொருட்கள் 90 சதவீதம் டெல்லி, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன, குறிப்பாக நெய் விற்பனை ஆகின்றது. ஆகவேதான் இது வேறு மொழி அறியாத மக்களுக்குப் பயன்படவேண்டும், நம்முடைய நெய் யைப்போல யாரும் விற்று விடக்கூடாது என்ற காரணத் தினால் இதை நாம் செய்கின்றோம், இந்தத் துறையின் மூலமாக இதைப்போல வேறு எந்தப் பொருளையும் அங்கே யிருந்து டின்களிலே நாம் எதுவும் இறக்குமதி செய்வதில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே விற் பனையாகின்ற நெய் டின்களிலேயாவது இந்தி இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அதைப் பார்த்துக் கொள்ளும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற துறைகளுக்கு நான் சொல்ல முடியாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 451, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

451—

பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தல்

*11375—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப் படையில் வரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது பற்றி அரசு பரிசீலிக்கும்,

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே. பாம்பூரில் சாத்தியக் கூறுகள் இருப்பின்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன தற்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விட்டதன் காரணமாகத்தான் நான் இதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த ஆவன செய்வார்களா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை தன்மையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும்,

முற்பகல் 10.20

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாவட்டங்களில் கால்நடை மருந்துவமனைகள் இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த மாவட்டங்களுக்குக் கால் நடை மருத்துவமனைகள் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கு., ப. கிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கால்நடை மருந்தகங்கள் இல்லாத பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு அந்த நடைமுறைப்படுத்துவதற்கு ஆராய்ந்து வருகிறது, ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டு மருத்துவமனைகள் இருக்கின்றன, ஒன்று பரமக்குடியிலும் இன்னொரு இடத்தில் ஒன்றும் இருக்கிறது, எனவே அந்த ஒன்றியத்திற்கு இரண்டு போதும் என்று நிறுத்திக் கொண்டால், அடுத்து பரிசீலிக்கப்படுவது-மற்றொரு பகுதிக்கு கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45 டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர்,